. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 18.03.2026 • மலர் 04 • இதழ்: 76 • Edition : Nagercoil • 18.03.2026 • Vol : 04 • Issue : 76 • Page : 4 • Rs. 5/-

## விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு

# சரியான முறையில் விசாரணை நடக்கிறது

## நீதிபதிகள் கருத்து

மதுரை மார். 18

விளாத்திகுளம் பள்ளி மாணவி கொலை வழக்கில் 5 பேரிடம் மரபணுச் சோதனை நடத்த முடிவு செய்யப்பட்டு அவர்களின் ரத்த மாதிரி சேகரிக் கப்பட்டு ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் அரசு தெரிவித்துள்ளது. மேலும் இந்த விசாரணை சரியான முறையில் நடப்பதாக நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடியைச் சேர்ந்த மனுதாரர் மாரீஸ்வரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், விளாத்திகுளம் அருகே பிளஸ் 2 மாணவி பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்ட வழக்கை சிபிஐக்கு மாற்றி உத்தரவிடுமாறு கோரப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது : மாணவி வழக்கில் சந்தேகிக்கப்படும் 5 பேரிடம் டிஎன்ஏ சோதனை நடத்த ரத்த மாதிரி, சேகரிக்கப்பட்டு தடயவியல் ஆய்வு மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சோதனை முடிவுகள் வரவேண்டியுள்ளது. சம்பவ நேரத்தில் அப்பகுதியில் பதிவான 1,600 செல் போன் எண்கள் சேகரிக்கப் பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த செல்போன் எண்களை சைபர் கிரைம் போலீஸார் ஆய்வு செய்து வருகின்றனர். 212 பேர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த இடத்தில் சிசிடிவி கேமராக்கள் இல்லை. சுற்றியுள்ள பகுதிகளில் 24 சிசிடிவி கேமராக்களின் பதிவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. எஸ்பி தலைமையில் காவல் ஆய்வாளரும் மற்றும் 10 சிறப்புப் படையினரும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தப் புகாரை அலட்சியமாகக் கையாண்டதற்காக போலீஸார் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவியின் பெற்றோர் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டது.

மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் மாரீஸ்குமார் வாதிட்டதாவது: மாணவியை இரண்டுக்கும் மேற்பட்டோர் பாலியல் வன்கொடுமை செய்து, கொலை செய்துள்ளனர்.

மாணவி மாயமானது தொடர்பாக மார்ச் 10ல் குளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. புகாரைப் பெறாமலேயே மகளிர் காவல் நிலையம் செல்லுமாறு போலீஸார் கூறினர்.



அடுத்தநாள் (மார்ச் 11) குளத்தூர் போலீஸார் வழக்குப் பதிய மறுத்துவிட்டனர். மாணவியின் உடல் மீட்கப்பட்ட பிறகே வழக்கு பதிந்தனர். மாணவி வன்கொடுமை செய்யப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியான பிறகே போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர்.

குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கக்கோரி போராட்டம் நடத்திய பிறகே எஸ்பி சம்பவ இடம்வந்தார். மார்ச் 10ல் வழக்குப் பதிந்து மாணவியைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்திருந்தால் கொலையைத் தடுத்திருக்கலாம்.

சிபிஐ விசாரணை கோரி நீதிமன்றம் செல்லக் கூடாது என மாணவியின் குடும்பத்தினரை போலீஸார் அச்சுறுத்தினர். இவ்வாறு அவர் வாதிடப் பட்டார். பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: விசாரணை சரியான முறையில் நடைபெற்று வருகிறது.

உடனடியாக குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும் என சாலை மறியல் போராட்டம் நடத்துவது, சமூக ஊடகங்கள் வழியாகவும், அரசியல் கட்சியினர், அமைப்புகள் சார்பிலும்அழுத்தம்கொடுப்பது விசாரணையைப் பாதிக்கும்.

அழுத்தம் கொடுப்பதால் மட்டும் ஒரு வழக்கில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிய முடியாது. அவசரப்படுத்துவது உண்மையான குற்றவாளிகளுக்குச் சாதகமாக அமையும். சம்பவம்தொடர்பாககாவல் ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இது போதுமான தண்டனை அல்ல. மாணவியின் பெற்றோர் அளித்த புகார் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்காத காவல்துறையினர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவியின் பெற்றோர் போலீஸ் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோரிடம் விசாரணை நடத்தி வாக்கு மூலத்தை வீடியோவில் பதிவு செய்ய வேண்டும். அறிவியல்பூர்வமாக விசாரணை நடைபெறும்.

விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை ஏப் .2ம் தேதிக்கு தள்ளிவைக்கப்படுகிறது. இவ்வாறு உத்தரவிட்டனர்.

---

## சென்னையில்

# 785 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை: மாவட்ட தேர்தல் அதிகாரி தகவல்



சென்னை மார்ச். 18

தேர்தல் பிரச்சார அனுமதியை இணைய வழியில் விண்ணப்பித்து பெற வேண்டும் என்று, அரசியல் கட்சிகளுக்கு மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை மாவட்டத்தில் அமலில் இருக்கும் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பாக, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் விளக்கும் கூட்டம், மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் தலைமையில் ரிப்பன் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தின் முடிவில் குமரகுருபரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது : சென்னையில் உள்ள 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 28.30 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

இத்தொகுதிகளில் 4,0 85 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. போலீஸ் மற்றும் தேர்தல் அலுவலர்கள் கொண்ட 375 மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் வாக்கு இயந்திரங்களைதயார் செய்யும் பணி, வாக்கு இயந்திரங்களை வாக்குச்சாவடிக்கு அனுப்பி வைத்தல், வாக்குப்பதிவு முடிவடைந்த பின்னர், வாக்கு எண்ணும் மையத்துக்கு கொண்டு செல்லுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும். வாக்குச்சாவடி அலுவலர்கள் 16,500 பேர் நியமிக்கப்பட உள்ளனர். இவர்களுக்கு தொகுதி வாரியாக பயிற்சி அளிக்கப்படும்.

சென்னை மாவட்டத்தில் 13,634 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், 6,349 கட்டுப்பாட்டுக் கருவிகளும் சரி பார்க்கப்பட்டு இருப்பில் உள்ளன. ஒவ்வொரு தொகுதிக்கும் 3 பறக்கும் படைகள் என்ற வீதம் 48 பறக்கும் படைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை, தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் 3 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் வீதம் 48 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த குழுக்கள், வாகனத் தணிக்கையில் ஈடுபடும். தேர்தல் விதி மீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் ஒன்று வீதம் 16 வீடியோ கண்காணிப்பு படைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கட்சிக் கூட்டங்கள் நிகழ்வுகளை இந்த படைகள் பதிவு செய்யும். தேர்தல் விதிமுறைகள் ஏதேனும் இருப்பின் நடவடிக்கை எடுக்கும்.

ரிப்பன் மாளிகையில் மாவட்ட தேர்தல் அலுவலக கட்டுப்பாட்டறை அமைக்கப்பட்டுள்ளது. அதை 18004257012 என்ற எண்ணில் தொடர்புகொண்டு விதிமீறல் தொடர்பாக புகார் தெரிவிக்கலாம். ஒரு தொகுதியில் ஒரு வேட்பாளர் ரூ.40 லட்சம் வரை செலவு செய்யலாம்.

ஒவ்வொரு செலவினத்துக்கான விலைப் பட்டியல் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்தலுக்காக பேரணி, கூட்டம் நடத்த உள்ள இடங்கள், காவல் துறை மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஒற்றைச்சாளர முறையில் கூட்டங்கள் நடத்துவது, வாகனங்களை பயன்படுத்துவது போன்றவற்றுக்கு உரிய அனுமதியை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்பாளர்கள், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் போன்ற 6 வகையான இனங்களுக்கு அனுமதி பெறுவதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் சுவிதா (Suvidha) என்ற இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. https://suvidha.eci.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். ஆர்கே நகர், திருவிக நகர், ராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம்திருவல்லிக்கேணி ஆகிய 5 தொகுதிகளுக்கு ராணி மேரி கல்லூரியிலும், பெரம்பூர், கொளத்தூர்.

வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணா நகர் ஆகிய 6 தொகுதிகளுக்கு லயோலா கல்லூரியிலும், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், மயிலாப்பூர் மற்றும் வேளச்சேரி ஆகிய 5 தொகுதிகளுக்கு கிண்டி அண்ணா பல்கலைக் கழகத்திலும் வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தற்போது 178 அமைவிடங்களில் 785 வாக்குச்சாவடிகள் பதற்றமான வாக்குச்சாவடிகளாக உள்ளன. பேனர் மற்றும் போஸ்டர்கள் முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. இந்த முறை சென்னையில் 80 சதவீதம் வரை வாக்குப்பதிவு நடைபெறும். இவ்வாறு அவர் கூறினார்

---

# விரைவில் வெளியாகிறது முக்கிய அறிவிப்பு?

## தவெக நிர்வாகிகளுடன் விஜய் தீவிர ஆலோசனை



சென்னை, மார்ச். 18

டெல்லியில் இருந்து நேற்று சென்னை திரும்பிய தவெக தலைவர் விஜய், கட்சியின் உயர்மட்ட நிர்வாகிளுடன் தீவிர ஆலோசனை நடத்தினார்.

தேஜ கூட்டணியில் தவெக இணையப்போவதாக எழும் யூகங்களுக்கு மத்தியில் விஜய் விரைவில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகிஉள்ளன.

சமீபத்தில் தவெக பொதுச்செயலாளர் ஆனந்த் நடத்திய மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்துக்கு பிறகே கூட்டணி குறித்த பரபரப்பு தொற்றிக்கொண்டது. கூட்டணி குறித்த தகவல்கள் கசிந்தது தொடர்பாக, ஆனந்தை விஜய் கண்டித்ததாகக் கூறப்படுகிறது.

இதற்குப் பின்னணியில் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா இடையிலான அதிகாரப் போட்டி நிலவுவதே காரணம் என தெரிகிறது.

இதற்கிடையில், அமித்ஷா தரப்பிலிருந்து கூட்டணி அழைப்பு வந்தாலும், அதை தவிர்க்கவே 90 இடங்கள், இரண்டரை ஆண்டு முதல்வர் பதவி என்ற நிபந்தனையை விஜய் விதித்ததாக கூறப்படுகிறது.

சமீபத்திய சிபிஐ விசாரணையின் போது அரசியல் அழுத்தம் இன்றி, கரூர் விவகாரம் குறித்து மட்டும் விசாரணை நடந்ததால் விஜய் உற்சாகமாக திரும்பி உள்ளார்.

இந்நிலையில் நேற்று இரவு ஆதவ் அர்ஜுனா அலுவலகத்தில் நடந்த ஆலோசனையில் பங்கேற்ற விஜய், நிர்வாகிகளுக்கு இடையே நிலவும் மோதலைச் சமாதானம் செய்துள்ளார்.

இதைத்தொடர்ந்து, தேர்தல் வியூகம் மற்றும் கூட்டணி குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை அவர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாக தவெக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே தவெக இணை பொதுச்செயலாளர் சிடிஆர். நிர்மல் குமார் நேற்று தனது எக்ஸ் தள பதிவில், 'பாஜக அதிமுக, ராமதாஸ், சசிகலா ஆகியோரை தவெகவுடன் தொடர்பு படுத்தி கூட்டணிப் பேச்சு வார்த்தை நடத்தப்படுவதாக கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

குறிப்பிட்ட கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் எந்த விதமான பேச்சுவார்த்தை எந்த மட்டத்திலும் நடைபெறவில்லை.

பேச்சுவார்த்தை நடப்பதாக கூறப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம். பொதுமக்களிடமும் தொண்டர்களிடமும் குழப்பத்தை விளைவிப்பதற்காக இத்தகைய ஆதாரமற்ற செய்திகள் திமுகவினரால் பரப்பப்படுகின்றன' என்று தெரிவித்துள்ளார்.

---

# "தவெக உடன் அதிமுக கூட்டணி பேச்சு நடத்தவில்லை"

## கே.பி.முனுசாமி திட்டவட்டம்



கிருஷ்ணகிரி, மார்ச். 18

தவெகவுடன் கூட்டணி பேச்சு வார்த்தை நடத்தவில்லை என அதிமுக துணை பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி எம்எல்ஏ தெரிவித்தார்.

தமிழகத்தில் தொடரும் பாலியல் வன் கொடுமைகள், கொலை, கொள்ளை, சட்ட ஒழுங்கு சீர்கேடு மற்றும் போதை பழக்கத்தை தடுக்க தவறியதாக திமுக அரசை கண்டித்து கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை எதிரே இன்று காலை தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

அதிமுக மாவட்ட செயலாளர்கள் அசோக்குமார் எம்எல்ஏ, முன்னாள் அமைச்சர்பாலகிருஷ்ணரெட்டி, மகளிர் அணி மாநில துணை செயலாளர் பரிதாநவாப், பாமக மோகன்ராம், பாஜக கவியரசு, தமிழ் மாநில காங்கிரஸ் ஜெயபிரகாஷ்உள்ளிட்டோர்முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில், அதிமுக துணை பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி எம்எல்ஏ கண்டன உரையாற்றினார்

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறிய: "அதிமுகவை பொறுத்தவரை மிகவும் தெளிவாக இருக்கிறோம். தவெகவுடன் கூட்டணி பேச்சு வார்த்தை நடைபெறவில்லை. திமுக செய்த தவறை மக்கள் புரிந்துகொள்ளகூடாதுஎன்பதால், ஏதோ ஒரு வகையில் வேகமான கருத்துகளை பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக, இதுபோன்ற சித்து விளையாட்டுக்களை திமுக செய்து கொண்டிருக்கிறது.

ஒரு சினிமாநடிகர் பற்றி பேசும்போது, அவர் மீது பற்றின் காரணமாக ஜெயக்குமார், செல்லூர்ராஜூ ஆகியோர் பேசி இருக்கலாம். கட்சியின் தலைவர் என்னகூறுகிறோரா, அதுதான் எங்களின் வேத வாக்கு.

திமுக செயலற்ற அரசாக உள்ளது. காவேரிப் பட்டணத்தில் நடந்த அசம்பவித நிகழ்ச்சிக்கு மூல காரணமாக இருப்பது திமுக ஒன்றிய செயலாளரின் மகன். அவர் மீது காவல் துறை உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால், அடுத்த முறை தவறு செய்வதற்கு முன்வர மாட்டார்கள். ஆனால், அவர்களுக்கு திமுக அரசு, காவல் துறை பாதுகாப்பு அளிக்கிறது.

ரேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வந்தவுடன், கந்திகுப்பத்தில் 200 கிலோ கஞ்சாவை போலீஸார் பறிமுதல் செய்தனர். தெலங்கானாவை சேர்ந்தவர், இங்கே வீடு எடுத்து குடியிருந்து கஞ்சா விற்பனை செய்துள்ளார். இது காவல் துறைக்கு தெரியாமல் இருக்குமா? காவல் துறையின் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்திருந்தால், ஆட்சியாளர்களின் நிர்பந்தம், திமுக நிர்வாகிகளின் அழுத்தம் இருந்திருக்கும்.

திறமையான காவல் துறையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் திமுக அரசு செயல்படவிடாமல் தடுத்துள்ளது.

பல்வேறு சோதனைகளை தாண்டி அதிமுகவையும், தொண்டர்களையும் எம்ஜிஆர், ஜெயலலிதாவை தொடர்ந்து காக்கும் தலைவராக பழனிசாமி உள்ளார். ஓபிஎஸ் அதர்மம், இபிஎஸ் தர்மம். அதர்மத்தின் கூட்டணி திமுக. தர்மத்தின் கூட்டணி அதிமுக. மீண்டும் தமிழக முதல்வராக அதிமுக பொது செயலாளர் பழனிசாமி பொறுப்பு ஏற்பார்" என்று என்று கே.பி.முனுசாமி கூறியுள்ளார்.

### தேனியில்

# பாலியல் வன்கொடுமைகள் மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தேனி மார்ச் 17

தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் முருக்கோடை ராமர்,மற்றும் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.டி.கே.ஜக்கையின் தலைமையில் நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள், சட்டம் ஒழுங்கு சீர்கேடு,போதைப் பொருட்கள் புழக்கம் அதிகரிப்பு ஆகியவற்றை கட்டுப்படுத்த தவறிய விடியா திமுக அரசை கண்டித்து, ஒருங்கிணைந்த தேனி மாவட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் சார்பாக, தேனி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முருக்கோடை ராமர் மற்றும் தேனி மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.டி.கே.ஜக்கையன் ஆகியோர் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தேனி நகர் கழக செயலாளர் கிருஷ்ணகுமார் முன்னிலையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, விலைவாசி உயர்வு, பாலியல் வன்கொடுமைகள்,போதைப் பொருட்கள் புழக்கம் அதிகரிப்பு ஆகியவற்றை கட்டுப்படுத்த தவறிய விடியா திமுக அரசை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன. கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களை சேர்ந்த ஏராளமான கழக நிர்வாகிகள்,மற்றும் பாஜக, அமமுக , பாட்டாளி மக்கள் கட்சி,தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, பார்வேர்டு பிளாக் கட்சிகள் உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி மாவட்ட மற்றும் அனைத்து பொறுப்பாளர்களும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்..

### கோணம் அரசு பொறியியல் கல்லூரியில்

# தேர்தல் வாக்கு எண்ணும் மையத்தினை கலெக்டர், எஸ்பி நேரில் பார்வையிட்டு ஆய்வு



நாகர்கோவில், மார்ச்.18

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்குமான தேர்தல் பணிகள் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி நடைபெற்று வருகிறது. தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததைத்தொடர்ந்து, அரசு அலுவலங்களில் உள்ள அரசு வளாகம் மற்றும் கட்டிடங்களில் உள்ள அரசியல் கட்சி விளம்பரங்கள், சுவர்விளம்பரங்கள் 24 மணி நேரத்திற்குள் அழிக்க மற்றும் அகற்றப்பட்டுள்ளது . பொதுவளாகம், கட்டிடங்கள், பேருந்து நிறுத்தம், ரயில்வே நிலையம், பாலங்கள், மின் கம்பங்கள், உள்ளாட்சிக்குட்பட்ட கட்டிடங்களில் உள்ள அரசியல் கட்சி விளம்பரங்கள், சுவர் விளம்பரங்கள், பதாகைகள் போன்றவை 48 மணி நேரத்திற்குள் அகற்றப்பட்டு வருகிறது. மேலும் தனியார் வளாகம் மற்றும் கட்டிடங்களில் உள்ள அரசியல் கட்சி விளம்பரங்கள், சுவர் விளம்பரங்கள், கட்சிக்கொடிகள் 72 மணி நேரத்திற்குள் அகற்ற துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வருகின்ற 23.04.2026 அன்று சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 1914 வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவு முடிந்த பின்னர் தொகுதி வாரிய மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம், விவிபேட் உள்ளிட்ட இயந்திரங்களை பாதுகாப்பாக எடுத்துவரப்பட்டு, கோணம் அரசு பொறியியல் கல்லூரியில் அந்ததந்த தொகுதிக்கென அமைக்கப்படும் வைப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

இந்த வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.ஸ்டாலின் ஆகியோர் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டன

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட உதவி தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கோதை, பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் மற்றும் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா உள்ளிட்ட துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

### நாகர்கோவிலில்

# மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் தேர்தல் நடத்தை ஆய்வு கூட்டம்



நாகர்கோவில், மார்ச்.18

குமரி மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளதை தொடர்ந்து போலீசார் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனை கூட்டம் நாகர்கோவிலில் உள்ள காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட எஸ்பி ஸ்டாலின் தலைமை வகித்து பேசியதாவது:

பாரபட்சம் இன்றி தேர்தல் விதிமுறை மீறல்களில் ஈடுபடும் நபர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பிரச்சினைக்குரிய இடம், நபர்கள் அடையாளம் கண்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல், பறக்கும் படையினரை முறையாக கையாளுதல், எல்லையோர சோதனை சாவடிகளில் சிசிடிவி கேமரா இயங்குவதை உறுதி செய்தல் வேண்டும். சோதனைசாவடிகளில் தேர்தல் ரீதியிலான வாகன சோதனையை மேற்கொள்ளுதல், சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தல், தேர்தல் விதிமுறைகளுக்கு எதிராக சமூக வலைதளங்களில் பதிவிடுவோர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல், சரித்திர பதிவேடு குற்றவாளியை கண்காணித்தல், நன்னடத்தை பிணை பெறுதல் முந்தைய தேர்தல் வழக்குகளில் தொடர்பு உடையவர்களை கண்காணிக்க வேண்டும் என்பன போன்ற பல்வேறு அறிவுறுத்தல்களை அதிகாரிகளுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வழங்கினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியன், அனைத்து உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

### பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில்

# பறக்கும் படையினர் வாகன சோதனையில் ரூ.38 லட்சம் பறிமுதல்



தருமபுரி மார்ச் 18

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காடு செட்டிப்பட்டி, மாரண்டஅள்ளி, கொலசனஅள்ளி சோதனை சாவடிகளில் தேர்தல் பறக்கும் படை அலுவலர் அசோக்குமார் தலைமையிலான குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த கார்களை நிறுத்தி அவர்கள் சோதனையில் செய்தனர். அதில் பாப்பாரப்பட்டி சேர்ந்த பழனி, அரூரை சேர்ந்த ரூபா, அஞ்செட்டி நாராயணசாமி, பரமசிவம் ஆகியோர் உரிய ஆவணங்கள் இன்றி ரூ.2 லட்சத்து 51 ஆயிரத்து 60 மற்றும் வெள்ளிப் பொருட்கள் கொண்டு சென்றது தெரியவந்தது. இதை அடுத்து அதிகாரிகள் பணம் மற்றும் வெள்ளிப் பொருட்களை பறிமுதல் செய்தனர். காடு செட்டிப்பட்டி பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்ட அப்போது அந்த வழியாக வந்த காரின் சோதனை செய்தனர். காரில் வந்தவர் கிருஷ்ணகிரி மாவட்டம் உத்தனப்பள்ளி அருகே உள்ள அளேசீபம் பகுதியைச் சேர்ந்த சிக்கன் கடை உரிமையாளர் சர்தார் என்பதும் நிலத்தை விற்று வீடு வாங்குவதற்காக ரூ. 35 லட்சத்தை காரில் பாலக்கோட்டில் உள்ள மாமனார் வீட்டிற்கு கொண்டு வந்ததும் தெரிந்தது. ஆனால் உரிய ஆவணங்கள் இல்லாததால் அந்தப் பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது போன்று பாலக்கோடு பகுதியில் வாகன சோதனையில்காரில் ஆவணங்கள்இன்றி கொண்டு வந்த 1 லட்சத்து 8,500 ரூபாயை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர். பாலக்கோடு தொகுதியில் மூன்று இடங்களிலும் வாகன சோதனையில் பறிமுதல் செய்யப்பட்ட ரூ. 38 லட்சத்து 59 ஆயிரத்து 560 பறக்கும் படையினர் தேர்தல் நடத்தும் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



தருமபுரி மார்ச் 18

தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட பொறுப்பாளர் ஆ. மணி எம்பி தலைமையில் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது .

இந்த கூட்டத்தில் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் தருமபுரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தருமபுரி, பென்னாகரம், அரூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மாநில ,மாவட்ட, நகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கழக வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய கடுமையாக களப்பணி செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் ஏழாவது முறையாக நமது கழக ஆட்சி அமைய பாடுபட வேண்டுமென்று நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் தங்கமணி, முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம் சுப்பிரமணி,, நகர செயலாளர்கள் நாட்டான் மாது, கௌதம், ஒன்றிய செயலாளர்கள் சண்முகம், காவேரி, பெரியண்ணன் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### குமரியில்

# தேர்தல் நடத்தை விதிமுறைகளை கடைபிடிப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம்

## திருமண மண்டபங்களுக்கு கலெக்டர் உத்தரவு



நாகர்கோவில், மார்ச்.18

சட்டமன்ற பொதுத்தேர்தல் வரும் 23.04.2026 நடைபெறுவதை முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதி முறைகள் அமலுக்கு வந்துள்ளது. அதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அச்சகம், திருமண மண்டபம் மற்றும் கூட்டரங்கு உரிமையாளர்கள் கடைபிடிப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமை வகித்தார். தொடர்ந்து அவர் கூறுகையில்:

திருமணக்கூடம் மற்றும் கூட்ட அரங்கில் திருமணம் மற்றும் சுப நிகழ்வுகள் தவிர வேறு எவ்வித அரசியல் தொடர்புடைய கூட்டங்கள் நடைபெற பதிவு செய்யப்பட்டால், அதன் விவரத்தினை முன் கூட்டியே தொடர்புடைய தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு தெரிவிக்கப்பட அறிவுறுத்தப்பட்டது. சுபநிகழ்வுகள் என்ற பெயரில் மக்களை கூட்டி பரிசு பொருட்கள் வழங்குவது, புடவை, வேட்டிகள், மது பாட்டில்கள் வழங்குவது மற்றும் பணம் கொடுப்பது போன்ற நிகழ்வுகள் நடைபெற உள்ளதாக அறியப்பட்டால், அதனை உடனடியாக தொடர்புடைய தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அரசியல் கட்சித் தலைவரின் பெயர்கள் மற்றும் உருவங்கள் பொறித்த தட்டிகள், பதாகைகள், பேனர்கள், அலங்கார வளைவுகள் ஆகியவற்றினை வைத்து வாக்குகள் சேகரிக்கும் நிகழ்வுகள் எதுவும் நடைபெறக் கூடாது, தங்கும் விடுதி உரிமையாளர்கள் தேர்தல் நடைபெறும் காலங்களில் விடுதிகளில் தங்க அனுமதி கோரும் நபர்களிடம் உரிய அடையாள அட்டைகளை சரிபார்க்க வேண்டும். மேலும், ஆதார் (அல்லது) புகைப்பட அடையாளத்துடன் கூடிய அடையாள அட்டை நகல்களைபெற்ற பின்னரேதங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் .

விடுதிகளில் தங்கும் நபர்கள் பற்றிய முழு விவரம் தொலைபேசி எண், தங்குவதற்கான காரணம் ஆகியவை பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என விடுதி உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அச்சகங்களில் தேர்தல் தொடர்பான பிரசுரங்கள், போஸ்டர், நோட்டீஸ், துண்டு பிரசுரங்கள் ஆகியவை அச்சடிக்கும் நேர்வுகளில் அரசியல் கட்சிகள் பெயர், எண்ணிக்கை ஆகிய விபரங்கள் புதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். அச்சடிக்கப்படும் நோட்டீஸ், போஸ்டர் ஆகியவற்றில் எவர் மனதையும் பர்படும் வகையில் தரக்குறைவான வாசகங்கள் இடம் பெறக் கூடாது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பொறுப்பாளர்களின் ஒப்புதல் கடிதம் பெற்ற பின்னரே அச்சக உரிமையாளர்கள் தேர்தல் தொடர்பான பிரசுரங்களை அச்சடிக்க வேண்டும். என தெரிவித்தார்.

நடைபெற்ற கூட்டத்தில் அச்சகம் மற்றும் திருமண மண்டபம் மற்றும் கூட்டரங்கு உரிமையாளர்கள்பலர்கலந்து கொண்டார்கள்.

### ஊத்தங்கரையில்

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு பொதுமக்களை அலை கலைக்கும் தனியார் நிறுவனம்

## மக்கள் அவதி விநியோகஸ்தர்கள் மீது குற்றச்சாட்டு



கிருஷ்ணகிரி, மார்ச். 18

கிருஷ்ணகிரி மாவட்டம்ஊத்தங்கரை பகுதியில் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். ஆன்லைனில் பதிவு செய்து பணம் செலுத்திய பிறகும், குறிப்பிட்ட நேரத்தில் சிலிண்டர் கிடைக்காததால், மக்கள் நேரடியாக விநியோக நிறுவன அலுவலகங்களை நாடி வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அலுவலகங்களில் அதிகமான கூட்ட நெரிசல் உருவாகி, பொதுமக்கள் மூச்சுத்திணறலுடன் காத்திருக்க வேண்டிய சூழல் நிலவுகிறது. குறிப்பாக ஆர்எல்ஆர் நிறுவனம் மீது மக்கள் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். ஆன்லைனில் பதிவு செய்தவுடன் வரும் ஓடிபி முறையை பின்பற்றாமல், “நேரில் வந்து ரசீது பெற்ற பின்னரே சிலிண்டர் வழங்கப்படும்” என நிறுவனம் விதிமுறையைமாற்றியுள்ளதாககூறப்படுகிறது. மேலும், “புத்தகத்தை ஒப்படையுங்கள், 45 நாட்களுக்கு பிறகு வாருங்கள்” என பொதுமக்களிடம் தெரிவிக்கப்படுவதால், அவசர தேவைகளுக்கு கூட சிலிண்டர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து பொதுமக்கள் தெரிவிப்பதாவது:

“ஆன்லைன் பதிவு, ஓடிபி, டெலிவரி கட்டணம் என அனைத்திற்கும் பணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் வீடு தேடி வழங்காமல், அலுவலகத்துக்கே வரவழைத்து சிரமப்படுத்துகின்றனர். 45 நாட்கள் காத்திருக்க சொல்லுவது ஏற்றுக் கொள்ள முடியாதது” என அவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். மேலும், அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள கூட்ட நெரிசல் குறித்து அச்சம் தெரிவித்த பொதுமக்களுக்கு, “இங்கே ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் நாங்கள் பொறுப்பல்ல” என விநியோகஸ்தர்கள் பதிலளித்ததாக கூறப்படுவது, மக்களிடையே மேலும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து, பொதுமக்களின் அவதியை தீர்க்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

# தேசிய ஜனநாயக கூட்டணி வெற் றி பெறுவது உறுதி; சட்டமன்றத் தேர்தலில் மக்கள் தி.மு.கவை வீட்டுக்கு அனுப்புவார்கள்

## ஆர்ப்பாட்டத்தில் டிடிவி. தினகரன் பேச்சு



தஞ்சாவூர், மார்ச்.18

தஞ்சாவூர் தலைமை தபால் அலுவலகம் முன் அ.தி.மு.க. தலைமையி லான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் தமிழக த்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமை கள் , சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள், கஞ்சா, போதைப்பொருள் புழக்கம், விலைவாசி உயர்வு முதலானவற்றை கட்டுப்படுத்த தவறிய ஆளும் தி.மு.க. அரசை கண்டித்து தமிழகம் முழுவதும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

அதையொட்டி தஞ்சாவூர் தலைமை தபால் நிலை யம் முன்பு தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க கூட்டணி கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு அ.தி.மு.க. மத்திய மாவட்ட செயலாளர் மா.சேகர் முன்னிலை வகித்தார்.கொள்கை பரப்பு துணைச் செயலா ளரும் மாநகர செயலாள ருமான என்.எஸ். சரவணன் வரவேற்று பேசினார். அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தலைமை தாங்கி கண்டன உரையாற் றினார். அப்போது அவர் பேசியதாவது:

தமிழகத்தில் திமுக ஆட்சியில் நாளுக்கு நாள் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை நடந்து வருகிறது. கஞ்சா, போதைப் பொருட்கள் புழக்கத்தை கட்டுப்படுத் த தவறியதால் இளை ஞர்கள், மாணவர் சமுதாயங்கள் போதை க்கு அடிமையாகி சமூக விரோத செயலில் ஈடுப டும் நிலைக்கு தி.மு.க அரசு தள்ளி உள்ளது . பச்சிளம் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. பெண்கள் தங்களது குழந்தைகளை வீட்டில் இருந்து வெளியே அனுப்பவே பயப்படு கின்றனர். பச்சிளம் குழந்தைகளை கூட பாலியல் வன்கொடுமை செய்யும் அவல நிலை இந்த ஆட்சியில் தான் நடந்து வருகிறது . தி.மு.க ஆட்சியில் ஊழல் இல்லாத துறைகளே இல்லை. தமிழகத்தில் முதல்வரின் குடும்பத்தை தவிர வேறு யாருக்கும் பாதுகாப்பு இல்லை. பெண்களுக்கு ரூ. 5000 மகளிர் உரிமை தொகை மற்றும் கோடைகால சிறப்பு தொகை வழங்கி ஓட்டு போட வைத்து விடலாம் என திமுக அரசு தப்பு கணக்கு போட்டுள்ளது . ஆனால் பெண்கள் ஏமாற தயாராக இல்லை. வரும் தேர்தலில் தி.மு.க ஆட்சி வீட்டுக்கு அனுப்பப் படுவது உறுதி. அதனைப் பெண்களே செய்து விடுவார்கள். மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து திமுக ஆட்சியை விரட்டி அடிப் பார்கள். தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறுவது உறுதி. மீண்டும் எடப்பாடி பழனிச்சாமி முதலமை ச்சராக ஆட்சிக்கட்டிலில் அமர்வார். நான் எந்தவித நிபந்தனையும் இல்லாம ல் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந் தேன் . மீண்டும் ஜெயல லிதாவின் ஆட்சி தமிழக த்தில் மலர வேண்டும் என்பதற்காக மன வருத்தங்களை எல்லாம் விட்டு விட்டு கூட்டணியில் இணைந்துள்ளேன். தற்போது எந்தவிதமான மன கசப்பும் இல்லை. அனைத்தும் சரியாகி விட்டது. தி.மு.க.விற்கு எதிராக எம்ஜிஆர் அதிமுக என்ற மாபெரும் இயக்கத்தை தொடங்கி னார். ஜெயலலிதா அதனை கட்டிக்காத்தார். தற்போது எடப்பாடி பழனிச்சாமி பொதுச் செயலாளராக திறம்பட பணியாற்றி வருகிறார். ஆனால் அதிமுகவில் எம்எல்ஏ, அமைச்சர், ஏன் முதல்வர் பதவியை கூட அனுபவித்து பலனடைந் து தற்போது அங்கிருந்து விலகி எதிரி கட்சியான திமுகவில் இணைந்து சிலர் நம்பிக்கை துரோக ம் செய்துள்ளனர். அவர்க ளுக்கு ஒருபோதும் மன்னிப்பு கிடையாது. தொண்டர்கள் மன்னிக்க மாட்டார்கள். இவ்வாறு அவர் பேசினார். இதையடுத்து ஆர்ப்பாட்ட த்தில் தி.மு.க அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன.

## சென்னை கிளையின் லயோலா கல்லூரியில்

# முன்னாள் மாணவர்கள் நிகழ்ச்சி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பங்கேற்பு



சென்னை, மார்ச் 18

லயோலா கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் நெட்வொர்க்கின் மிகப்பெரிய கிளையான, சென்னை கிளை லயோலா முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் 2026ஆம் ஆண்டிற்கான வருடாந்திர கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்,

மாற்றம் அறக்கட்டளை நிறுவனர் சுஜித் குமார், திரைப்பட நடிகர் மற்றும் எழுத்தாளர் மோகன் ராமன், ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட பல்வேறுதலைமுறைகளைசேர்ந்தலயோலா முன்னாள் மாணவர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கல்வி, வழிகாட்டுதல் மற்றும் சமூகத்தின் ஆற்றல் குறித்து தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

குறிப்பாக லயோலா மாணவர்களுக்கு தேவையான இன்டர்ன்ஷிப் மற்றும் எக்ஸ்டெர்ன்ஷிப் வாய்ப்புகளை உருவாக்குதல், முன்னாள் மாணவர்களுக்கென பிரத்யேகமாக நடத்தப்படும் வேலைவாய்ப்பு முகாம்களை ஒருங்கிணைத்தல், கல்லூரியின் ஸ்டார்ட்அப் மற்றும் இன்குபேஷன் மையமான 'லயோலா இன்க்ளூசிவ் இன்னோவேஷன் இம்பாக்ட் சென்டர்' உடன் இணைந்து, பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற முன்னாள் மாணவர்கள் மூலம் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல் ஆகியவற்றுக்கான ஆலோசனை பகிர்ந்து கொண்டனர்.

அமேலும் இந்நிகழ்ச்சியில்மேலும், லயோலா கல்லூரியின் தந்தை அதிபர் டாக்டர் அந்தோணி ராபின்சன் எஸ்.ஜே, செயலர் டாக்டர் டி. தாமஸ் அலெக்சாண்டர் எஸ்.ஜே, முதல்வர் டாக்டர் ஏ. லூயிஸ் ஆரோக்கியராஜ் எஸ்.ஜே, மற்றும் சங்கத்தின் நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

2. பயிற்சித் திட்டங்கள்: லயோலா மாணவர்களுக்குத் தேவையான இன்டர்ன்ஷிப் (*Internship*) மற்றும் எக்ஸ்டெர்ன்ஷிப் (*Externship*) வாய்ப்புகளை உருவாக்குதல்.

3. வேலைவாய்ப்பு முகாம்கள்: முன்னாள் மாணவர்களுக்கென பிரத்யேகமாக நடத்தப்படும் வேலைவாய்ப்பு முகாம்களை ஒருங்கிணைத்தல்.

முக்கியப் பிரமுகர்களின் கருத்துக்கள்:

"சென்னைகிளைதொடர்ந்துலயோலா முன்னாள் மாணவர்களை அர்த்தமுள்ள திட்டங்கள் மூலம் ஒன்றிணைத்து வருகிறது. இன்று அறிவிக்கப்பட்ட முன்முயற்சிகள், முன்னாள் மாணவர்கள் கல்லூரி மற்றும் மாணவர்களுடன் இணைந்து செயல்படவும், சமூகத்திற்குப் பயனளிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவும் அதிக வாய்ப்புகளை வழங்கும்." — திரு. கார்த்திக் சபாநாயகம், தலைவர், LAA CC.

"லயோலா முன்னாள் மாணவர்கள் நெட்வொர்க் எப்போதும் கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தகைய முன்முயற்சிகள் முன்னாள் மாணவர்களை கல்லூரிக்கு நெருக்கமாகக் கொண்டு வருவதுடன், மாணவர்கள் மற்றும் சமூகத்துடனான ஒத்துழைப்பிற்கு வழிவகுக்கிறது." — டாக்டர் ஏ. லூயி ஆல்பர்ட் SJ, இயக்குனர், லயோலா முன்னாள் மாணவர்கள் சங்கம்.

இந்த ஓராண்டு திட்டத்தின் மூலம், லயோலா சென்னை கிளை ஒரு துடிப்புமிக்க அமைப்பாக, பல தலைமுறை லயோலா மாணவர்களை வெறும் கொண்டாட்டங்களுக்கு மட்டுமல்லாமல், சமூக சேவைக்கும் ஒத்துழைப்பிற்கும் இணைப்பதில் தனது உறுதியை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

மேலும், லயோலா கல்லூரியின் தந்தை அதிபர் டாக்டர் அந்தோணி ராபின்சன் SJ, செயலர் டாக்டர் டி. தாமஸ் அலெக்சாண்டர் SJ, முதல்வர் டாக்டர் ஏ. லூயிஸ் ஆரோக்கியராஜ் SJ மற்றும் சங்கத்தின் நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

## தருமபுரி மாவட்டத்தில்

# அதிமுக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தருமபுரி மார்ச் 18

தருமபுரி மாவட்ட அதிமுக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் அதிமுக மாவட்ட செயலாளர் கே. பி. அன்பழகன் தலைமையில் பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகள், போதை பொருட்கள் புழக்கத்தை தடுக்க தவறிய திமுக அரசை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் தருமபுரி மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ். ஆர் .வெற்றிவேல், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி, நகரச் செயலாளர் பூக்கடை ரவி ,மாநில மருத்துவரணி இணை செயலாளர் அசோகன், பாமக மாவட்ட செயலாளர் வெங்கடேஸ்வரன் எம் எல் ஏ, அமமுக மாவட்ட செயலாளர் டி .கே. ராஜேந்திரன், தமிழ் மாநில காங்கிரஸ் புகழேந்தி, பாஜக மாவட்ட செயலாளர் சரவணன், ஐஜேகே,புதிய நீதி கட்சி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## திருச்சி துறையூரில்

# நெல் மூட்டை லாரி மோதி கணவன்-மனைவி பலி



துறையூர், மார்ச். 18

துறையூர் அருகே ஆலத்துடையான் பட்டியைச் சேர்ந்த மகாமுனி சரசு தம்பதியினர் இருசக்கர வாகனத்தில் கரூர் மாவட்டம் மாயனூர் சென்றுவிட்டு ஊர் திரும்பியபோது, தா. பேட்டை அருகே வளைவில் நெல் மூட்டைகளை ஏற்றி வந்த லாரி மோதியதில் கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே கணவன் மனைவி இருவரும் தலை நசுங்கி உயிரிழந்தனர். தா. பேட்டை போலீசார் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து, லாரி ஓட்டுநரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பைங்குளம் அரசுப் பள்ளி ஆண்டு விழா



புதுக்கடை, மார்.18

பைங்குளம் அரசு நடுநிலைப் பள்ளியின் 141 வது ஆண்டு விழாவினை பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் கிருஷ்ணன் தேசியக் கொடியேற்றி தொடங்கி வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்ட நிகழ்விற்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் ரெவிந்திரன் தலைமை வகித்தார். கிராம கல்விக் குழு தலைவர் கோவிந்தராஜ், உறுப்பினர்கள் காமராஜ், தவசி, சின்னையன், பணி நிறை இராணுவ அதிகாரி சஜீவ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பட்டதாரி ஆசிரியை ஷீலா அனைவரையும் வரவேற்றார். தலைமையாசிரியர் மதியழகன் ஆண்டறிக்கை வாசித்தார். வட்டாரக் கல்வி அலுவலர் சஜிலின் சுஜி, வட்டார வளமைய மேற்பார்வையாளர் மெற்றில்டா ரோஸ்லின் வாழ்த்துரை வழங்கினர்.

பேராசிரியர் சஜீவ், முனைவர் மணி ஆகியோர் சிறப்புரை வழங்கினர். எழுத்தாளர் புலவர் கு.இரவீந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசினை வழங்கினார். பள்ளியின் புரவலர்களான தொழில் அதிபர் முருகன், கண்ணன் கிரானைட்ஸ் உரிமையாளர் இராமகிருஷ்ணன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியைகள் சுஜிஸ்டார்லிஸ், சுபிதா, விஜயா, கிளாடி, பிரமிளா, சரளா, சுபிலா, ஷீஜா ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். பட்டதாரி ஆசிரியை மாயா அனைவருக்கும் நன்றி கூறினார்.

# குமரி - கேரளா எல்லையான களியக்காவிளை சோதனை சாவடி

## துணை ராணுவ படை தலைமையில் போலீசார் தீவிர வாகன சோதனை



புதுக்கடை, மார்.18

பைங்குளம் அரசு நடுநிலைப் பள்ளியின் 141 வது ஆண்டு விழாவினை பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் கிருஷ்ணன் தேசியக் கொடியேற்றி தொடங்கி வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்ட நிகழ்விற்கு ஓய்வு பெற்ற ஆசிரியர் ரெவிந்திரன் தலைமை வகித்தார்.

கிராம கல்விக் குழு தலைவர் கோவிந்தராஜ், உறுப்பினர்கள் காமராஜ், தவசி, சின்னையன், பணி நிறை இராணுவ அதிகாரி சஜீவ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பட்டதாரி ஆசிரியை ஷீலா அனைவரையும் வரவேற்றார். தலைமையாசிரியர் மதியழகன் ஆண்டறிக்கை வாசித்தார். வட்டாரக் கல்வி அலுவலர் சஜிலின் சுஜி, வட்டார வளமைய மேற்பார்வையாளர் மெற்றில்டா ரோஸ்லின் வாழ்த்துரை வழங்கினர்.

பேராசிரியர் சஜீவ், முனைவர் மணி ஆகியோர் சிறப்புரை வழங்கினர். எழுத்தாளர் புலவர் கு.இரவீந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசினை வழங்கினார். பள்ளியின் புரவலர்களான தொழில் அதிபர் முருகன், கண்ணன் கிரானைட்ஸ் உரிமையாளர் இராமகிருஷ்ணன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். ஆசிரியைகள் சுஜிஸ்டார்லிஸ், சுபிதா, விஜயா, கிளாடி, பிரமிளா, சரளா, சுபிலா, ஷீஜா ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். பட்டதாரி ஆசிரியை மாயா அனைவருக்கும் நன்றி கூறினார்.



திருச்சி 17.03.2026 காலை 10 மணியளவில் மரக்கடை MGR சிலை அருகில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் சார்பாக திமுக அரசை கண்டித்துமாபெரும்கண்டனஆர்ப்பாட்டம்நடைபெற்றது. இதில் பாரதிய ஜனதா கட்சியின் திருவெறும்பூர் வடக்கு மண்டல் தலைவர் S.நந்தா, பிரச்சார பிரிவு மாவட்ட தலைவர் சிட்டி பாபு , OBC அணி மாவட்ட தலைவர் சர்வேஷ்வரன் , அரியமங்களம் மண்டல் தலைவர் பாலகுமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில்

# ரூ12 லட்சம் பணம் பறிமுதல் பறக்கும் படையினர் அதிரடி நடவடிக்கை

ஈரோடு மார்ச் 18

தமிழக சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி பறக்கும் படை அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள் ஈரோடு மாவட்டம் கோபி சிறுவலூரில் நடந்த வாகன சோதனையில் 53, 200 இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது . உரிய ஆவணம் இன்றி இந்த பணம் கொண்டு செல்லப்பட்டதால் அவை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதேபோல் கோபி பழனி கவுண்டன் புதுர் பகுதியில் நடந்த வாகன சோதனையில் சத்தியமாங்கலத்தைச் சேர்ந்த பாத்திர வியாபாரி மோகன் பிரசாத் என்பவர் கொண்டு சென்ற ரூ 60 ஆயிரம் அத்தாணியில் இருந்து காங்கயத்திற்கு பரமசிவம் என்பவர் கொண்டு சென்ற 51 ஆயிரத்து 710 கோபியை அடுத்த கொடிவேரி கொங்குநாடு வழியாக வந்த பங்களா புதுரை சேர்ந்த சுந்தரேசன் என்பவர் கொண்டு சென்ற ஒரு 60 ஆயிரம் ஆகியவற்றையும் பறக்கும்படி அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நொய்யல் சோதனை சாவடியில் அடுத்தடுத்து வந்த இரண்டு வாகனங்களில் கொண்டுவரப்பட்ட 2 13,000 மற்றும் ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 190 ஆகியவற்றையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அந்தியூர் வரட்டு பள்ளம் சோதனை சாவடி அருகே நாகேஷ் என்பவர் கொண்டு சென்ற ஒரு லட்சத்தையும் அம்மாபேட்டையை அடுத்த சின்ன பள்ளம் சோதனைச்சாவடி அருகே நடந்த வாகன சோதனையில் சந்தோஷ் என்பவர் கொண்டு சென்ற ஒரு லட்சம் பவானி ஜம்பையில் நடந்த வாகன சோதனையில் சூர்யா என்பவர் கொண்டு சென்ற ரூ 59 ஆயிரத்து 630 சந்தோஷ் குமார் என்பவர் கொண்டு சென்ற ரூ ஒரு லட்சம் காஞ்சிக் கோவில் பகுதியில் வெங்காய வியாபாரி கந்தசாமி கொண்டு சென்ற ரூ 2 லட்சத்து 65 ஆயிரம் ஆகியவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். ஈரோடு மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் பல்வேறு பகுதிகளில் ரூ 11 லட்சத்து 98 ஆயிரத்து 730 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நாகர்கோவிலில்

# தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்



நாகர்கோவில், மார்ச்.18

தமிழகத்தில் அதிகரித்து வரும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், சட்ட ஒழுங்கு சீர்கேடு மற்றும் போதைப் பொருள் கடத்தல், போதை புழக்கத்தால் இளைஞர்கள்இளம்பெண்கள்வாழ்க்கை சீரழிவு, இதனை கட்டுப்படுத்த தவறிய தமிழக அரசை கண்டித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு நடைபெற்றது. தளவாய்சுந்தரம் எம்எல்ஏ தலைமை வகித்தார்.

இதில் தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்கள்,கழகத் தொண்டர்கள்,நிர்வாகிகள் பொதுமக்கள் என 1000க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பு முன்னாள் மத்திய அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான.பொன்.ராதாகிருஷ்ணன் பேசுகையில்:

தமிழகம் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பாதுகாப்பாக இல்லதா சூழலை இந்த திமுக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்படுத்தி உள்ளது. இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கு பதிலாக போதை பழக்கங்களுக்கு போதை விற்பனையை ஊக்குவித்துள்ளது. இதனால் தமிழகம் சீரழிவை சந்தித்தது. இதனை மாற்ற வருகின்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று எடப்பாடியார் மீண்டும் ஆட்சி அமைப்பார் என தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் குமரி மேற்கு மாவட்ட அதிமுக கழக செயலாளர் ஜெயசதர்சன், முன்னாள் அமைச்சரும் கழக அமைப்புச் செயலாளருமான.கே.டி.பச்சைமால், முன்னாள் எம்பி நாஞ்சில் வின்சென்ட், பாஜக மாவட்ட தலைவர் கோபகுமார், மற்றும் அமமுக, பாமக உள்ளிட்ட கூட்டணி கட்சி மாவட்ட தலைவர்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்

## ஊத்தங்கரையில்

# டி.எஸ்.பி தலைமையில் துணை ராணுவப் படையினரின் கொடி அணிவகுப்பு: பொதுமக்கள் பாதுகாப்பு உறுதி



ஊத்தங்கரை, மார்ச். 18

ஊத்தங்கரை பகுதியில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டவும், பொதுமக்களிடையே பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் காவல் துறை மற்றும் துணை ராணுவப் படையினர் இணைந்து பிரம்மாண்ட கொடி அணிவகுப்பை இன்று நடத்தினர். இந்த அணிவகுப்பிற்கு துணை காவல் கண்காணிப்பாளர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார். இதில் காவல் ஆய்வாளர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன், ஆயுதம் ஏந்திய துணை ராணுவப் படையினரும் திரளாக பங்கேற்றனர்.

காலை சுமார் 10 மணியளவில் ஊத்தங்கரை ரவுண்டானா பகுதியில் இருந்து அணிவகுப்பு தொடங்கியது. முக்கிய வீதிகள் வழியாக நகர்ந்து, கல்லாவி சாலை வழியாகச் சென்று வட்டார வளர்ச்சி அலுவலகம் வரை அணிவகுப்பு நடைபெற்றது.

இந்த அணிவகுப்பின் முக்கிய நோக்கங்கள்: பொதுமக்களிடையே பாதுகாப்பு உணர்வை வலுப்படுத்துதல் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு கண்காணிப்பை மேம்படுத்துதல் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு எச்சரிக்கை விடுத்தல் சீருடை அணிந்த பாதுகாப்புப் படையினரின் இந்த அணிவகுப்பு, அப்பகுதி மக்களிடையே நம்பிக்கையை அதிகரித்துள்ளது. அணிவகுப்பு நடைபெற்ற பாதைகளில் போக்குவரத்தை சீராக வைத்திருக்க கூடுதல் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்

## வேலூர் மாவட்டத்தில்

# மிகப் பிரமாண்டமாக 30வது கிளை ஸ்கை மொபைல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் ஷோரூம் திறப்பு விழா



வேலூர், மார்ச்18

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலப்பாடி, வீரகோயில் தெரு, ஆவின் எதிரில், மிகப் பிரமாண்டமாக 30வது கிளை ஸ்கை மொபைல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் ஷோரூம் திறப்பு விழா ஸ்கை மொபைல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் கிளை ஸ்கை எக்ஸிக்யூடிவ் டைரக்டர்ஸ் ஆர். யோகோஷ்குமார் மற்றும் யோ.பிரார்த்தனா யோகேஷ் ஆகியோர் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடம் தலைமை இயக்குனரும் அறங்காவலருமான டாக்டர். எம். சுரேஷ்பாபு கலந்து கொண்டு திறந்து வைத்து சிறப்பித்தனர். ரோட்டரி கிளப் டிஸ்ட்ரிக்ட் கவர்னர் ஆர்ஜ வி. சுரேஷ் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி சிறப்பித்தனர். முதல் விற்பனையை வழக்கறிஞர் கே.பி.ஹரிகிருஷ்ணன், தூக்கி வைத்து, ஸ்ரீ ஜே கே பியூல்ஸ் கே கோபாலகிருஷ்ணன் முதல் விற்பனைசெய்துஎலக்ட்ரானிக்ஸ்பொருளை பெற்றுக்கொண்டு தொழில் மென்மேலும் வளர உங்கள் புகழ் வளர வேண்டும் என வாழ்த்தினார்.மேலூம் மொபைல் ஷோரூம் இயக்குனர்களுக்கும் பணியாளர்களுக்கும் வாழ்த்து தெரிவித்து, பாராட்டி, முதல் விற்பனை செய்து பொருளை பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர். இதில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## த.வெ.க.விற்கு பல்சமய நட்புறவுக் கழகம் ஆதரவு



திருப்பூர்: மார்ச் 18

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்பூர் தெற்கு தொகுதியில் போட்டியிடு தமிழக வெற்றி கழகத்திற்கு பல்சமய நட்புறவுக் கழகம் ஆதரவு தெரிவித்து.

தமிழக வெற்றி கழகத்தின் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் குத்புதீன் அவர்களை சந்தித்து பல்சமய நட்புறவுக் கழகத்தின் சார்பாக மாவட்ட மருத்துவ அணி செயலாளர் பாஷா ,வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் முழு ஆதரவை தெரிவித்து கடிதம் வழங்கினார்.

மாவட்டத் தலைவர் ஷாஜகான் கழக பேச்சாளர் கருப்புசாமி பாண்டி ஒன்றிய தலைவர் சந்திரன் மற்றும் இளைஞர் அணி செயலாளர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்..

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

# ஓசூரில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரும் தேர்தல் நடத்தும் அலுவலருமான தினேஷ் குமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தற்பொழுது தமிழக சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இம்மாதம் 30 ம் தேதி முதல் வேட்பு மனு தாக்கல் துவங்க உள்ளன. அதற்கான ஆயத்தப் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு அரசியல் கட்சிகள் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் வேட்பு மனு மீதான பரிசீலனை, சின்னம் ஒதுக்குதல், வேட்பாளர்கள் தகுதி நீக்கம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் விரிவான ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து கர்நாடக மாநில எல்லையான ஜூஜூவாடி, TVS சோதனை சாவடிகளை ஆய்வு செய்து வாகனங்களை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் பராமரிக்கும் பதிவேடுகளையும் வாகனங்களையும் ஆய்வு செய்தார்

இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .தங்கதுரை. ஓசூர் சார் ஆட்சியர் . ஆக்ருத்தி சேத்தி IAS ஓசூர் உதவி காவல் கண்காணிப்பாளர் , வட்டாட்சியர் . குண சிவா சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் .விஜயகுமார் தனி வட்டாட்சியர்கள் சண்முகசுந்தரம் .சுப்பிரமணி உட்பட வருவாய்த்துறை அலுவலர்கள் காவல்துறையினர் பங்கேற்றனர்.

## ஓட்டப்பிடாரத்தில்

# பாலியல் வன்கொடுமை செய்தவருக்கு 10 வருடம் சிறை; ரூ.10,000 அபராதம்

### தூத்துக்குடி மகிளா நீதிமன்றம் தீர்ப்பு



தூத்துக்குடி, மார்ச். 18

ஓட்டப்பிடாரம் காவல் நிலைய பாலியல் வன்கொடுமை வழக்கில் சம்பந்தப்பட்ட நபருக்கு10 வருடம் சிறை தண்டனை மற்றும் ரூபாய் 10,000/ அபராதம் விதித்து தூத்துக்குடி மகிளா நீதிமன்றம் தீர்ப்பு ;

கடந்த 2020ம் ஆண்டு ஓட்டப்பிடாரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வீட்டிற்குள் நுழைந்து ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் தூத்துக்குடியைச் சேர்ந்த தமிழழகன் (61/26) என்பவரை ஓட்டப்பிடாரம் காவல் நிலைய போலீசார் கைது செய்தனர். இவ்வழக்கு குறித்து போலீசார் புலன் விசாரணை செய்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி முருகன் நேற்று தமிழழகன்என்பவரைகுற்றவாளி என உறுதி செய்து அவருக்கு பெண்ணின் வீட்டிற்குள் நுழைந்த குற்றத்திற்காக 10 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூபாய் 5,000/ அபராதமும், பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக 10 ஆண்டுகள் சிறை தண்டனை ரூபாய் 5,000/ அபராதம் விதித்தும் மேற்படி தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்று தந்த மணியாச்சி உட்கோட்ட காவல் துணைகண்காணிப்பாளர் அஜுகுமார் ,

இவ்வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த அப்போதைய கடம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மாரியம்மாள், நீதிமன்றத்தில் சிறப்பாகவாதிட்டசிறப்பு அரசு தரப்பு வழக்கறிஞர் எல்லம்மாள் , வழக்கின் விசாரணைக்கு உதவியாக இருந்த தலைமை காவலர் அஜித் ரெக்ஸ்டன் ஆகியோர் களை தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன் பாராட்டினார்.

## வேலூர் மாவட்டத்தில்

# ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ ஆதிகேசவ பெருமாளின் மண்டல பூர்த்தி மற்றும் மகா சங்காபிஷேகம்



வேலூர், மார்ச்18

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் காந்திநகர் அடுத்த மோட்டூரில் அமைந்துள்ள ஸ்ரீ திருவேங்கையம்மன் ஆலயத்தில் அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ ஆதிகேசவ பெருமாளின் மண்டல பூர்த்தி மற்றும் மகாசங்காபிஷேகம் செவ்வாயன்று (மார்ச் 17) நடைபெற்றது. முன்னதாக கணபதி பூஜை, மகா சங்கல்பம், புன்யாஹவாசனம் நடத்தி சங்காபிஷேகம் செய்து நிறைவாக திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.

இந்த திருக்கல்யாண உற்சவத்தில் சிறப்பு அழைப்பாளராக திமுக வடக்கு மாவட்ட பொருளாளர் அ.நரசிம்மன் பங்கேற்று சுவாமியை தரிசித்தார். இதில் ஏராளமான பக்தர்கள் திருக்கல்யாண உற்சவத்தை கண்டு களித்தனர்.

பின்அனைவருக்கும்அறுசுவை உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை திருவாளர்கள் ஜெயராமன், சுப்பிரமணியன், பிச்சாண்டி, உமாகாந்த், சேகர் (உதவி காவல் ஆய்வாளர்) ஆகியோர் செய்திருந்தனர்.

மாலையில் ஸ்ரீ ஆதிகேசவபெருமாளின் அருள் பொழியும் பெருமாள் என்ற தலைப்பில் மதுரை கவிஞர் திருவாளர் திருவாசகம் சுந்தரம் தலைமையில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது.

## வேலூரில்

# அதிமுக கூட்டணி கட்சியினர் திமுக அரசை கண்டித்து ஆர்பாட்டம்



வேலூர், மார்ச்19

வேலூர்மாவட்டம்,வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் அதிமுக மாவட்ட செயலாளர் அப்பு தலைமையில் ஆர்பாட்டம் விடியா திமுகவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் அதிமுக கூட்டணி கட்சியினர் ஈடுபட்டனர் இதில் பாமக முன்னாள் மத்திய அமைச்சர் என்.டி.சண்முகம்,பாஜக மாவட்டத்தலைவர் தசரதன்,அதிமுக மாவட்ட செயலாளர்வேலழகன்,அதிமுகபொருளாளர் மூர்த்தி, அதிமுக,பாமக,பாஜக,தமிழ்மாநில காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் கலந்துகொண்டனர் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு போதை பொருட்கள் கட்டுபடுத்ததவறியதை கண்டித்தும் நடைபெற்ற ஆர்பாட்டத்தை அதிமுக மாநிலங்களவை உறுப்பினர் தம்பிதுரை கலந்துகொண்டு ஆர்பாட்டத்தை துவங்கி வைத்து பேசுகையில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துள்ளது இந்த ஆட்சியில் சொன்ன வாக்குறுதி ஒன்றை கூட நிறைவேற்றவில்லை போதை பொருட்கள் நடமாட்டமும் அதிகரித்துள்ளதாக பேசினார்

இதில் திரளான கூட்டணி கட்சியினர் கலந்துகொண்டு கோஷங்களை எழுப்பினார்கள்

## தக்கலையில்

# குமரி தோழன் எழுதிய நூல் வெளியீடு தமுஎகச சார்பில் நடந்தது



தக்கலை, மார்ச். 18

தமிழ்நாடுமுற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்க குமரிமாவட்ட கமிட்டி சார்பில் குமரி தோழன்எழுதிய இந்தீவரம் என்ற நாவல் வெளியிடும் விழா அழகியா மண்டபம் அன்னை ஆதா அரங்கில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் கவிஞர் ஹலிமா தலைமை தாங்கினார். மாவட்ட இணை செயலாளர் மிகைலான் வரவேற்புரை ஆற்றினார். இந்தீவரம் நாவலை மாநிலதுணை பொதுசெயலாளர் வேலாயுதம் வெளியிட அதன் பிரதிகளை மாவட்ட பொருளாளர் மனோகரஜஸ்டஸ்,மாநிலசெயற்க்குழு உறுப்பினர் ஜெயகாந்தன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரெஜிமோள் பெற்றுகொண்டனர். மாவட்ட செயலாளர் அருள்மனோ புத்தக விளக்கவுரை ஆற்றினார்.

மாநில துணை பொது செயலாளர் லட்சுமிகாந்தன், மாநிலக்குழு உறுப்பினர்விடியல்குமரேசன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஹசன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். புத்தக ஆசிரியர் குமரி தோழன் ஏற்புரை ஆற்றினார். மாவட்ட இணைச்செயலாளர்சாந்தகுமார் தொகுத்து வழங்கினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் சனல் நன்றி கூறினார்.

## சென்னை

# ஜோய் ஆலுக்காஸ் அறக்கட்டளை 50 குடும்பங்களுக்கு இலவச வீடு



சென்னை, மார்ச். 18

தமிழ்நாட்டில் உள்ள பின்தங்கிய குடும்பங்களுக்கு, புதிதாக கட்டப்பட்ட 50 ஜோய் இல்லங்களை ஜோய் ஆலுக்காஸ் அறக்கட்டளை இலவசமாக வழங்கியுள்ளது.

இந்த இல்லங்களின் திறப்பு விழா மற்றும் பயனாளிகளுக்கான சாவிகள் வழங்கும் விழா சென்னை வள்ளுவர் கோட்டத்தில்நடைபெற்றது.ஜோய்ஆலுக்காஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான ஜோய் ஆலுக்காஸ் தலைமையில், நடிகர்தியாகராஜன் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில், நடிகை தேவயானி, தயாரிப்பாளர் சங்க செயலாளர் கதிரேசன், இயக்குனர் சரண், நடிகர் மைம் கோபி, தயாரிப்பாளர் எஸ். கே.சம்பத், பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர், நடிகர் சந்தோஷ், நடிகை சார்மி, நல்லி குப்புசாமி, கல்யாணமாலை மோகன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன் மூலம் பயனாளிகள் குடும்பங்களுக்கு இல்லங்கள் முறையாக திறந்து வைக்கப்பட்டு, அதற்கான சாவிகளை நடிகர் பிரசாந்த் வழங்கினார்.

ஜோய் இல்லங்கள் திட்டம் 7.5 லட்சம் மதிப்பீட்டில் சுமார் 500 சதுர அடி பரப்பளவில், ஏறக்குறைய செலவில் கட்டப்பட்டுள்ள ஒவ்வொரு இல்லமும், சமூகத்தின் விளிம்பில் தள்ளப்பட்டவர்களுக்கு வெறும் தங்குமிடத்தை மட்டுமல்லாமல், கண்ணியம், பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்வையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வறுமை, இயற்கை சீற்றங்கள். நாள்பட்ட நோய்கள் மற்றும் மாற்றுத்திறன் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களே இத்திட்டத்தின் பயனாளிகளாக உள்ளனர். பாதுகாப்பான வீட்டு வசதியைப் பெறுவதற்குப் பெரும்பாலும் சிரமப்படும் சமூகக் குழுக்களே இவர்கள் ஆவர். நிலையான வீட்டு வசதியை வழங்குவதன் மூலம், இத்திட்டமானது இத்தகைய நலிந்த குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் வாய்ப்புகளைத் கட்டமைத்துக்கொள்ளவும், எதிர்காலத்திற்கான தேடிக்கொள்ளவும் வழிவகை செய்கிறது.

சிறந்த தமிழ்நாட்டில் தற்போது வழங்கப்பட்டுள்ள இல்லங்களையும் சேர்த்து, கேரளா, தமிழகம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் 'ஜோய் இல்லங்கள் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மொத்த இல்லங்களின் எண்ணிக்கை 600 ஐத் தாண்டியுள்ளது. இத்திட்டத்தின் அடுத்தகட்ட விரிவாக்கமாக, தெலங்கானாவில் மேலும் 50 இல்லங்களின் கட்டுமானப்பணிகள்தற்போதுநிறைவடையும் தருவாயில் உள்ளன; அதேவேளையில், ஆந்திரப் பிரதேசத்தில் மேலும் 50 இல்லங்களைக் கட்டுவதற்கான பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம், தென்னிந்தியா முழுவதும் அறக்கட்டளையின் வீட்டு வசதித் திட்டங்களின் வீச்சு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து, ஜோய் ஆலுக்காஸ் அறக்கட்டளையானது தனது நிறுவனச் சமூகப் பொறுப்புணர்வு (CSR) சார்ந்த முன்னெடுப்புகளைச் சுகாதாரம், கல்வி, முதியோர் பராமரிப்பு மற்றும் பெண்கள் மேம்பாடு ஆகிய துறைகளில் மையப்படுத்தியுள்ளது. குறிப்பாக, போதிய வசதிகள் அற்ற சமூகங்களில் நிலவும் கட்டமைப்பு சார்ந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் வகையிலான திட்டங்களுக்கே அறக்கட்டளை முன்னுரிமை அளித்துச் செயல்பட்டு வருகிறது. கேரளாவில் மாதாந்திர டயாலிசிஸ் கருவிகளை விநியோகித்தல், டயாலிசிஸ் இயந்திரங்களை நன்கொடையாக வழங்குதல்,மருத்துவமனைவார்டுகளைபுதுப்பித்தல் மற்றும் நோய்த்தடுப்பு சிகிச்சை மற்றும் இரத்த தான இயக்கங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்தல் ஆகியவை இதன் சுகாதார முயற்சிகளில் அடங்கும்.

கோவிட்19 தொற்றுநோய் காலத்தில், அறக்கட்டளை அதன் 'ஜோய் ஆஃப் ஹோப் திட்டத்தின் கீழ் உதவித்தொகை மூலம் பெற்றோரை இழந்த குழந்தைகளின் கல்வியை ஆதரித்தது. கேரளாவின் திருச்சூரில், டயாலிசிஸ் மையம், நோய்த்தடுப்பு சிகிச்சை பிரிவு மற்றும் பிற சிறப்பு சேவைகளை உள்ளடக்கிய மூத்த குடிமக்கள் பராமரிப்பு வசதியையும் அறக்கட்டளை இயக்குகிறது.

கூடுதலாக, தையல் மற்றும் அழகுக் கலை திறன்களில் தொழில் பயிற்சி திட்டங்கள் மூலம், பெண்கள் நிதி சுதந்திரத்தை அடைவதற்குத் தேவையான திறன்களுடன் அதிகாரம் பெற்றுள்ளனர். இதனால் அவர்கள் தங்கள் குடும்பங்களை ஆதரிக்கவும் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கவும் முடியும்.

ஜோய் ஹோம்ஸ் திட்டம், நிலையான வீட்டுவசதி என்பது சமூக மேம்பாட்டிற்கான ஒரு அடிப்படை படியாகும். குடும்பங்கள் பாதுகாப்பான வாழ்க்கையையும் பிரகாசமான எதிர்காலத்தையும் உருவாக்க உதவுகிறது என்ற அறக்கட்டளையின் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது.

இந்நிகழ்வில் பிரசாந்த் பேசுகையில், '' சென்னையில் ஜோய் ஆலுக்காஸ் நிறுவனம் தொடங்கி இது 18 ஆம் ஆண்டு. இன்றைய நாளில் கூடுதல் சிறப்பு அம்சமாக ஒரு பணியை ஜோய் ஆலுக்காஸ் நிறுவனத்தினர் தொடங்கியிருக்கிறார்கள்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.